## இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் - 2018

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 2018 திசெம்பர் 31 முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் நிதி சட்டத்தின் பிரகாரமும் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

### 1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் அவ்ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அந்த நிறுவனம் தொடர்பாக வருடாந்தம் மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக முறையான புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும். அச் சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்படும் ஒவ்வொரு நிறுவனம் தொடாபான வருடாந்த நிதிக்கூற்றுக்கள், விதிகள் மூலம் குறிப்பிடக்கூடிய வகையில்லாத காலப்பகுதியில் அந் நிறுவனங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கையுடன் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அச் சட்டத்தின் 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் அண்டறிக்கை மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்திற்கு தயாரித்தல் இடம்பெறுவதாக உறுதிப்படுத்தப்பட வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய ஆண்டறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும். எவ்வாறாயினும் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி மற்றும் யின் பிரகாரம் 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 01/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை பிரகாரம் நியதிச்சட்ட சபைகளில் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிதிக்கூற்றுக்கள் இவ்வறிக்கை திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.1 கணக்காய்வு அவதானிப்புக்கள்

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதி அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இல் 5.1 ஆம் பந்தி | 2017 ஆம் ஆண்டு தொடக்கம் எதிர்வரும் காலம் தொடர்பாக கூட்டிணைந்த திட்டமொன்றும் 2018 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமான்றும் கணக்காய்வு திகதியான 2019 செப்தம்பர் வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் கூட்டிணைந்த திட்டமொன்றும் செயல்நடவடிக்கைத் திட்டமான்றும் தயாரித்து கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2003 யூன் 02 ஆந் திகதி பீஈடீ 12 ஆம் இலக்க உடைய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தி | 2016 ஆம் ஆண்டு முதல் கூட்டுத்தாபனத்திற்குரிய மூன்று உத்தியோகத்தர்கள் ஏனைய இரண்டு அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டு அந்த இரண்டு உத்தியோகத்தர் களுக்காக ரூபா 2,638,104 ஆன சம்பளம் மற்றும் படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனை. |

**(ஆ) முகாமைத்துவ செயற்பாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 1964 ஒக்தோபர் 01 ஆந் திகதி 14/186 ஆம் இலக்க 2011 யூன் 30 ஆந் திகதி 1712/21 ஆம் இலக்க உடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நியமிக்கப்பட்ட வியாபார நடவடிக்கைகளுக்கு இடையே நேரடியாக அல்லது முகவர்கள் மூலமாக ஆழ்கடல் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடல், மீன் பதனிடுதல், அங்கீகரிக்கப்பட்ட முகவர் மூலமாக மீன்களை தொகையாக மற்றும் சில்லறையாக வியாபாரம் செய்தல், மீன் மற்றும் மீன் உற்பத்திகளை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி செய்தல்,வெளிநாட்டு சந்தைகளில் மீன் விற்பனை செய்தல் போன்ற செயற்பாடுகள் கூட்டுத்தாபனத்தினால் மேற் கொள்ளப்படவில்லை.<br>கூட்டுத்தாபனத்தை ஆரம்பிக்கும் போது கூட்டுத்தாபனத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த துறைமுகங்கள மற்றும் நங்கூரத் தளங்களை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல் மீனவர் உபகரணங்கள் இறக்குமதி செய்தல் மற்றும் விற்பனை செய்தல், மீன்பிடி படகுகள் உற்பத்தி செய்தல், மீன்பிடி படகுகள் தொடர்பான பழுது பார்த்தல் வசதிகள் வழங்குதல், மீனவர்களின் தேவைக்கேற்ப | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்க வில்லை. | கூட்டுத்தாபனத்தை ஆரம்பித்த நோக்கங்களை நிறைவேற்று வதற்கு தேவையான கட்டுப்பாட்டு முறைமைகளைப் பலப்படுத்த வேண்டியதுடன் வர்த்தமானி மூலம் வியாபார செயற்பாடுகளை திருத்தம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென |

| | | | |
|---|---|---|---|
| | அவசியமான உபகரணங்களை உருவாக்கி விற்பனை செய்தல் போன்ற வியாபார நடவடிக்கைகள் கடற்றொழில் அமைச்சின் கீழ் இலங்கை கடற்றொழில் துறைமுக கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட சீ-நோர் மன்றம் மற்றும் இலங்கை தேசிய நீரியல் வாழ் உற்பத்தி அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்ட துடன் அவ் நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கமைய கூட்டுத்தாபனத்தின் வியாபார பணிகள் திருத்திய மைத்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (ii) | கூட்டுத்தாபனத்தினால் மீன்களை விற்பனை செய்யும் போது முகவர்கள் நாட்டில் சகல மட்டங்களும் மேவுகை செய்யப்படும் வகையில் மீன்களை விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் மீன் சந்தையில் விலையை நிர்ணயித்தல் ஒழுங்குபடுத்தல் நிறுவன மொன்றாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் மீன் சந்தையில் விலையை நிர்ணயித்து ஒழுங்கு படுத்தல் நிறுவனமொன்றாக செயற்படுத்துவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது. இதனால் கடந்த 06 ஆண்டு காலப்பகுதியில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்பங்கு 1.1 சதவீதம் முதுல் 0.7 சதவீதம் வரை செலுத்தப்பட்டிருந்தது. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்க வில்லை | நாட்டின் அனைத்து மாவட்டங்களும் மேவுகை செய்யப்படும் வகையில் கடல் மீன்களை விற்பனை செய்வதற்கும் கூட்டுத்தாபனத்தின் மீன் விற்பனை பங்கினை அதிகரிப்பதற்கும் போதியளவு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (iii) | மீன்கள் விற்பனை செய்யும் போது முகவர்களூடாக மீன்கள் விற்பனை செய்வதன் மூலம் குறைந்த செலவில் மேற்கொள்ள கூடியதாக இருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் செலவு கூடிய முறையான புதிய விற்பனை நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு மீன்கள் விற்பனை செய்வதற்காக கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், புதிய விற்பனைக் கூடங்களை நிர்மாணித்து | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்க வில்லை. | செயற்பாட்டு கிரயத்தை குறைப்பதற்காக தேவையான திட்டங்களை தயாரித்து செயற் படுதுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென |

| | | | |
|---|---|---|---|
| | வியாபார நடவடிக்கைக்கு புதிய ஊழியர்கள் ஆட்சேர்ப்பதற்கு நேர்ந்த காரணத்தினால் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு செலவு மேலும் அதிகரித்து இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | |
| (iv) | கூட்டுத்தாபனத்தினால் நேரடியாக அல்லது முகவர்கள் மூலமாக ஆழ் கடல் இழுவைப்படகு மூலம் மீன் பிடித்தலானது கூட்டுத்தாபனத்தை ஸ்தாபிக்கும் போதுள்ள வியாபார பணியாக இருந்தபோதும் இதனை மேற்கொள்ளாது மீன் வழங்குனருக்கு கொடுப்பனவு மேற்கொள்ள ஏற்படும் தாமதம் காரணமாக நியாயமான விலையில் மீன்கள் கொள்வனவு செய்ய கூட்டுத்தாபனத்திற்கு முடியாது போனது | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தை ஆரம்பித்த நோக்கங்களை நிறைவேற்று வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென |
| (v) | கூட்டுத்தாபனத்தை மறுசீரமைப்பு செய்து இலாபமீட்டும் வர்த்தக வியாபாரமாக மாற்றுவதற்கான குறிக்கோளின் அடிப்படையில் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தன்னார்வ ஓய்வூதியம் பெறும் முறையை நடைமுறைப் படுத்தி 2016 மார்ச் 18 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை யின் பிரகாரம் 2016 மே 20 ஆந் திகதி ரூபா 109,906,261 ஐ செலவு செய்து 102 சேவையாளர்கள் ஓய்வு பெறச் செய்யப்பட்டிருந்தனர்.<br>கூட்டுத்தாபனம் இலாபமீட்டும் வர்த்தக வியாபாரமாக மாற்றமடைவதற்கான இலக்கை அடைவதற்கு வேண்டிய ஏனைய திட்டங்களை தயாரித்து செயற்படுத்தியிருக்கவில்லை. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | முகாமையினால் கூட்டுத்தாபனத்தை மறுசீரமைப்பு செய்வதற்காக தயாரிக்கப்பட வேண்டியதுடன் சுற்றறிக்கை ஆலோசணை பிரகாரம் சுயமாக ஓய்வுபெறும் முறைமை செயற்படுத்தப்பட வேண்டுமென |
| (vi) | 2011 ஆம் ஆண்டு இடம்பெற்றிருந்த ரூபா 2,558,028 பெறுமதியான பொதியிடல் இருப்புக்கள் பற்றாக்குறை அறவிடப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்க வில்லை. | இருப்பு பற்றாக்குறை தொடர்பாக பரீட்சித்து அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் இனங்காணப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென |

| | | | |
|---|---|---|---|
| (vii) | கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 50 அதி குளிரூட்டியுடனான லொறி வாகனம் இருந்த போதிலும் அவற்றில் 46 லொறிகளில் அதிகுளிரூட்டி இயந்திரம் இயங்காதிருந்த போதும் இவ் லொறிகளை மீன் விற்பனை விநியோகத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தன. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் வளங்கள் செயற்திறனாக செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்த வேண்டுமென |

**(இ) பெற வேண்டிய மற்றும் கொடுக்க வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 213,398,533 ஆன அறவிடப்பட வேண்டிய நிலுவை கடன் மீதியில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 21,350,932 ,தொகையும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 53,856,139 மீதியும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 13,931,795 மீதியும் பகுப்பாய்வு செய்ய முடியாத மீதி ரூபா 884,913 உம் உள்ளடக்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்க வில்லை. | கடன்பட்டோரிடமிருந்து பெற வேண்டிய பணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் |
| (ii) | 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட 111,008,896 தொகையான 07 வைத்திய சாலைகளுக்குரிய கடன் பட்டோர் மீதிகள் இல்லையென வைத்தியசாலைகளால் குறிப்பிடப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக பரீட்சிக்கப்படாதிருந்ததுடன் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் செய்யப்பட்ட உறுதிப்படுத்தல்களில் ரூபா 21,586,769 ஆன கடன்பட்டோருக்குரிய மீதி உறுதிப்படுத்தல் கிடைத்திருக்க வில்லை. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்க வில்லை. | கடன்பட்டோர் பதிவேடுகளில் காண்பிக்கப்பட்டிருந்த மீதிகளின் சரியானதன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென |

| | | |
|---|---|---|
| (iii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் காணப்பட்ட ரூபா 210,105,942 ஆன நிலுவை கடன்கொடுத்தோர் மீதிகளில் ரூபா 41,186,374 தொகை 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்ட போதும் ரூபா 21,006,310 ஆன கடன் கொடுத்தோர் மீதிகளுக்காக காலப்பகுப்பாய்வு காணப்பட வில்லை. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்க வில்லை. | கடன்கொடுத்தோருக்கு விரைவாக பணத்தை வழங்குவதற்கு அல்லது மேலும் பொறுப்பாக இல்லாத கடன்காடுத்தோர் மீதியாக இருப்பின் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். |

**(ஈ) இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தினால் 2006 முதல் 2019 யூலை 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கான ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 174,927,250 ஆன நிலுவை பங்களிப்பு தொகையொன்றும் ரூபா 82,367,893 மிகை தொகையொன்றும் 2006 முதல் 2016 காலப்பகுதிக்கான ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ரூபா 15,520,274 நிலுவை பங்களிப்பு தொகையொன்றும் ரூபா 7,663,632 ஆன மிகை கட்டணமும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,300,133 ஆன நிலுவை பணிக்கொடை தொகையும் அதற்காக ரூபா 1,116,950 ஆன மிகை கட்டணமும் செலுத்த வேண்டியிருந்தது. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்க வில்லை. | சட்ட ரீதியான கொடுப்பனவு களை உரிய திகதிகளில் கொடுப்பனவு செய்வதற்கு தேவையான முறைமைகள் தயாரிக்கப்பட்டு அது தொடர்பாக மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். |

**(உ) செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) பாதுக்க சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள விற்பனை நிலையம் 1994 ஆண்டு முதல் உடன்படிக்கையொன்று இல்லாமல் நடாத்திச் செல்லப்பட்டு வருவதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் | சட்ட பிரிவினால் பேணிச் செல்லப்படும் உடன்படிக்கை பிரதிகளுடன் கூடிய கோவை காணாமல் போயிருந்ததுடன் செயற்பாட்டு பிரிவு கோவை 2019 | பொறுப்பான உதியோகத்தர்களின் கீழ் கோவைகள் பேணிச்செல்ல வேண்டியதுடன் அவை காணாமல் போனமைக்கு காரணங்கள் பரீட்சிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2018 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 1041 ஆம் இலக்க பணிப்பாளர் சபை கூட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் புதிய வாடகை யொன்றின் கீழ் உடன்படிக்கை மேற்கொள்ள ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செப்தெம்பர் 05 ஆந் திகதி இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய புலனாய்வு ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | |
| (ii) | 2018 ஆம் ஆண்டிற்கு முன்னர் கைதவிர்ப்பதற்கு தீர்மானிக் கப்பட்ட ரூபா 3,200,000 மொத்த பெறுமதி யான 4 வாகனங்கள் மற்றும் பெறுமதி இனங் காணப்படாத 04 வாகனங்கள் கைதவிர்க்கப்படாமை காரணமாக 2019 திசெம்பர் 20 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைக்கு உட்பட்டிருந்தன. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்க வில்லை. | வாகன கைதவிர்ப்பு சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 2017 பெப்ரவரி 27 ஆந் திகதி ரூபா 1,500,000 தொகையான கணனி மயப்படுத்திய கணக்கு முகாமைத்துவ முறையொன்றை கொள்வனவு செய்வதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இதற்கான தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.2.1, 5.3.11, 5.4.4 இன் பிரகாரம் ஒப்பந்த உடன்படிக்கையொன்றும் கேள்வி பாதுகாப்பு மற்றும் ரூபா 300,000 தொகையான முற்பணக் கொடுப்பனவிற்காக பிணை பொறுப்பொன்றும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. 2019 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரை 02 ஆண்டுகள் கடந்திருந்த போதும் கணனிமயப்படுத்தப்பட்டகணக்கு முகாமைத்துவ முறைமை ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்க வில்லை. | தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் குறித்த நிறுவனத்திடமிருந்து இழப்பீட்டை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | அரச மதிப்பீட்டாளரால் மாதாந்த வாடகை ரூபா 141,667 என மதிப்பிடப்பட்ட பேசாலையில் அமைந்துள்ள கூட்டுத்தானத்திற்குரிய 03 ஏக்கர், 01 ரூட் 13.9 பேர்ச் அளவிலான வியாபார நிலையம் 2016 | 2016 திசெம்பர் 05 ஆந் திகதிய ஹென்டி சீ புட் எக்ஸ்போட் (தனி) கம்பனியால் பேசாலைக் காணி ரூபா 130,000 ஆன | பெறுகை குழு தீர்மானம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் எனவும் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகளை |

| | | | |
|---|---|---|---|
| | ஒக்தோபர் 17 ஆந் திகதி பெறுகை குழுவினால் மாதாந்த வாடகை ரூபா 150,000 என தீர்மானிக்கப்பட்டிருந்தது. அத்தீர்மானத்திற்கு இணங்காமல் மாதாந்த வாடகை ரூபா 130,000 இற்கு குத்தகைக்கு வழங்கியமையால் 2016 திசெம்பர் 14 ஆந் திகதி கூட்டுத்தானத்திற்கு ரூபா 480,000 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.<br><br>2016 திசெம்பர் 14 ஆந் திகதி ஏற்படுத்தப்பட்ட குத்தனை உடன்படிக்கையின் 06 ஆம் பிரிவின் பிரகாரம் உடன்படிக்கை ஆரம்பத்தின் போது ஓராண்டு காலப்பகுதிக்காக ரூபா 500,000 ஆன வங்கி பிணையொன்று கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டு அது வருடாந்தம் நாளது வரையாக்கப்பட வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கூட்டுத்தானத்திற்குரிய 20 ஏக்கர் 01 ரூட் 15 பேர்ச் முழுக் காணியில் குத்தகைக்கு வழங்கிய காணியை வேறுபடுத்தாமை காரணமாக மொத்த காணி அளவினையும் தனியாருக்கு பயன்படுத்த சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. | மாதாந்த வாடகைக்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கு பொது முகாமையாளர் பரிந்துரைத்து தலைவரால் குறித்த தொடர் செயற்பாடு களை மேற்கொள்ளு மாறு 2016 திசெம்பர் 09 ஆந் திகதி சட்ட பிரிவிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பாதுகாப்பதற்கு போதியளவு கட்டுப்பாட்டு முறைமைகளை அறிமுகப்படுத்தி செயற்படுத்த வேண்டும். |
| (v) | காலி ஐஸ் இயந்திரக்கூடத்தின் அதிகுளிரூட்டிசாலைக்குரிய இரண்டு கன்டென்சர்கள் ரூபா 313,103 இற்கு பழைய இரும்பிற்கு 2018 மே 16 ஆந் திகதி விற்பனை செய்யப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 770 மற்றும் 771 இன் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு சபை மூலம் பயன்படுத்த முடியாத பொருட்கள் என இனங்காணப்பட்டிருக்வில்லை. மேலும் தொழில்நுட்ப அறிவுடனான பொறியியலாளர் ஒருவரின் அறிக்கையொன்று பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு விசாரணையுடன் இணங்குகின்றேன். இனொவெவி இன்ஜினயரிங் தனியார் கம்பனியிபிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கன்டென்சர் இயந்திரங்களுக்காக ரூபா 12,737,500 (பெறுமதி சேர் வரியில்லாமல்) தொகையில் 20% தொகையான ரூபா 2,547,500 தொகை கூட்டுத்தாபனத்தினால் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும், அரசின் நிதி ஏற்பாடுகளிலிருந்து கூடிய பயனை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அந்நிதிஏற்பாடுகளை செலவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உடன்படிக்கை பிரகாரம் பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் காலி ஐஸ் இயந்திரக்கூடத்திற்கு கன்டென்சர் இயந்திரமொன்று ரூபா 6,368,750 வீதம் 2 இயந்திரங்கள் ரூபா 12,737,500 (பெறுமதி சேர் வரியில்லாமல்) கொள்வனவு செய்வதற்கு பெறுகை குழு அங்கீகாரம் கிடைத்திருந்தது. இதற்காக ரூபா 2,547,500 தொகை முற்பணம் 2018 ஏப்ரல் 12 ஆந் திகதி கொடுப்பனவு செய்து இரண்டு கன்டென்சர்களும் முறைமைக்கு பொருத்தப்பட்டிருந்த போதும் ஐஸ் கட்டியாவதற்கு கூடிய காலம் எடுத்தல், கன்டென்சரின் வாயு மற்றும் நீர் கசிவு மற்றும் தரத்தில் கறைந்த கன்டென்சர்கள் பொருத்தப்பட்டிருந்தன.<br><br>தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையின் பிரகாரம் கோரப்பட்ட 02 கன்டென்சர்கள் விவரக்குறிப்புக்களுடன் இணங்காவிட்டால் எவ்வித நிபந்தனைகளுமில்லாமல் நிராகரித்து முற்பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் 2019 திசெம்பர் வரையிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பேரில் விசேடத்துவ அறிவுடன்கூடிய பொறியியலாளரின் அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டு தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (vi) | கூட்டுத்தாபனத்தினால் 2017 மார்ச் 28 ஆந் திகதி முகத்துவாரம் தலைமை அலுவலகத்தில் அமைந்துள்ள காணியில் 117.78 பேர்ச் மற்றும் 30 பேர்ச் காணி தனியார் நிறுவனமொன்றுக்கு 4 ஆண்டு காலப்பகுதிக்காக முறையே ரூபா 1,100,000 மற்றும் ரூபா 333,000 இற்கு குத்தகைக்கு வழங்கியருந்ததுடன் 2019 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வரை 08 மாதங்களுக்கான நிலுவை வாடகையான ரூபா 5,487,450 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. தனியார் நிறுவன மொன்றினால் மேலும் 49.7 பேர்ச் அனுமதியின்றி பயன்படுத்தப் பட்டிருந்த போதும் அதில் 29.7 பேர்ச் இற்குரிய அரச விலை | கணக்காய்வு விசாரணையுடன் இணங்குகின்றேன். கணக்காய்வு விசாரணையில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் வோர்கஸ் கலம்பு சிப்யார்ட் தனியார் கம்பனி 2016/86 B திட்டவட்ட வரைபடத்தில் உள்ள லொட் இல. A பகுதிக்குரிய 29.7 பேர் இற்கு அண்மித்த அளவு மற்றும் 20 பேர்ச் காணி அக்கம்பனிக்கு குத்தகைக்கு அல்லது அவ்விடத்தை மீண்டும் கூட்டுத்தா | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணி பொருளாதார பெறுமதிக்கு குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டாளரின் மாதாந்த குத்தகை மதிப்பீடு ரூபா 178,333 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 29.7 பேர்ச் அனுமதியற்ற பாவனைக்காக 2017 மார்ச் முதல் 2019 ஆகஸ்ட் வரை கூட்டுத்தாபனத்தினால் இழக்கப்பட்ட குத்தகை வாடகை ரூபா 4,993,334 ஆக இருந்தது. | பனத்திற்கோ கையேறபதற்கு அக்கம்பனியுடன் 2019 ஒக்தோபர் 23 ஆந் திகதி ஆரம்ப கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. | |
| (vii) | உற்சவ சமயங்களில் சலுகை விலையில் மீன்களை விற்பனை செய்வதற்கு ரூபா 100 மில்லியன் கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் 15.7 மில்லியன் வழங்குனர்களின் நிலுவை கடன்களை தீர்வுசெய்வதற்கும் ரூபா 45 மில்லியன் வங்கி மேலதிகப்பற்றினை தீர்வு செய்வதற்கும். மேலும் ரூபா 10.7 மில்லியன் பணிக்கொடை கொடுப்பனவிற்கும் பயன்படுத்தப்பட்டிருந்தது. | முகாமையினால் கணக்காய்வு பந்தி ஏற்றுக் கொள்ளப்பட்டது. | கூட்டுத்தாபனத்திற்கு வழங்கும் நிதிஏற்பாடுகளை உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (viii) | காலாவதியான பாவனைக்கு பொருத்தமற்ற மீன்களை விற்பனை செய்தமையினால் பொது சுகாதார பரீட்சகர்களினால் 03 வழக்குகளும் கூட்டுத்தாபனத்தின் வாகன விபத்து தொடர்பாக இழப்பீட்டு முதல் ரூபா 9,500,000 ஐ கோரி 5 வழக்குகளும் தொழிலாளர்களினால் மீண்டும் வேலை மற்றும் பின் சம்பள இழப்பீடு கோரி 08 வழக்கும் சேவகி ஒருவரினால் ரூபா 5 மில்லியன் ஐ இழப்பீடாக கோரி ஒரு வழக்கும் அடிப்படை உரிமை மீறல் சம்பந்தமாக கூட்டுத்தாபன தொழிலாளரின் வழக்கு 2 உம் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக நீதவான் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தில் வழக்குகளும் தொடரப்பட்டிருந்தன. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்க வில்லை. | நிறுவகத்திற்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கு தொடர்பாக கவனம் செலுத்தி விரைவில் முடிவுறுத்திக்கொள்வதற்கும் அவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாமல் இருப்பதற்கும் தேவையான கட்டுப்பாட்டு முறைமை களை அறிமுகப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ix) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதி இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தினால் வெளிநபர்களுக்கெதிராக மீன்களை கடனுக்கு விற்பனை செய்து கிடைக்க வேண்டிய ரூபா 23,481,680 பெறுமதியான தொகையை அறவீடு செய்யும் பொருட்டு 09 வழக்குகளும் ரூபா 19,438,275 ஆன குத்தகை வாடகையை அறவிடுவதற்காக 06 வழக்குகளும் தொடரப்பட்டிருந்தன. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய பணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (x) | 2003 யூன் 02 ஆந் திகதி பீஈடீ 12 ஆம் இலக்க அரச முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.2 ஆம் பிரிவிற்கமைய, வருடாந்த செயலாற்றலை மதிப்பீடு செய்தல் தொடர்பான சிரேஷ்ட முகாமைத்துவ குழுவை பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட வேண்டி இருப்பினும், கூட்டுத்தாபனத்தின் வருடாந்த செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்காக சிரேஷ்ட முகாமைத்துவ குழு நியமிக்கப்படாமை காரணமாக பின்வரும் குறைபாடுகள் தொடர்பாக முறையான எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.<br>• கூட்டுத்தாபனத்தின் வருடாந்த செயலாற்றலை மதிப்பீடு செய்வதற்காக பணிப்பாளர் சபையின் கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் மீன் விற்பனை நிலையங்கள் 32 இன் 2014 ஆம் வருடம் 28 நிலையங்களும் 2015 ஆம் வருடம் 30 நிலையங்களும் நட்டம் அடைந்த போதிலும், முறையாக அந்தந்த ஆண்டுகளில் பெற்றுக் கொள்ளப்பட்ட முழு நட்டம் ரூபா 180,538,573 உம், ரூபா 138,040,828 உமாக இருந்தது. 08 ஐஸ் இயந்திர சாலைகளும் 2015 ஆம் ஆண்டு ரூபா 33,364,965 ஆன நட்டம் அடைந்திருந்த | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்க வில்லை. | கூட்டுத்தாபனத்தினால் நட்டத்தை குறைத்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வதற்கும் கணக்காய்வு விசாரணைகளுக்காக பதில் வழங்குவதற்கும் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்க வேண்டிய கடன்களை அறவிடுவதற்கும் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் முறையான கட்டுப்பாட்டு முறைமைகள் செயற்படுத்தப்பட வேண்டும். |

போதிலும் இந் நட்டத்தை குறைத்துக் கொள்வதற்கான திட்டத்தை நடப்பாண்டின் இறுதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

- முன்னைய ஆண்டின் 06 கணக்காய்வு விசாரணை களுக்கும் மீளாய்வாண்டின் 09 கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.
- உள்ளக கணக்காய்வு அறிக்கைகளைப் பரீட்சித்த போது பேருவல வலயத்தின் 2016 சனவரி 01 முதல் 2018 திசெம்பர் 31 வரை ரூபா 1,877,993 ஆன கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 1,550,464 தொகையான செயலற்ற கடன்மீதிகள் காணப்பட்ட துடன் பொறுப்பான உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.

**(ஊ) பதவியணியினர் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) 2018 திசெம்பர் 31 திகதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 724 ஆக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணினிர் 571 ஆக இருந்தது. 153 வெற்றிடங்கள் காணப்பட்டன. அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் நாளாந்த வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான சிரேஷ்ட நிலை பதவியான பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர், மனித வள அபிவிருத்தி மற்றும் நிர்வாக கணக்காளர், கிரய மற்றும் முகாமைக் கணக்காளர் உட்பட 19 பதவிகளில் | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்கவில்லை. | நிர்வாக செயற்பாடுகளை பலப்படுத்துவதற்காக சிரேஷ்ட மட்டத்தில் அத்திவசிய பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிடங்கள் காணப்பட்ட காரணத்தினால் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகம் மற்றும் செயலாற்றல் தொடர்பில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியிருந்தன. மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கிடையே மிகை எண்ணிக்கை 107 ஆக இருந்த காரணத்தினால் கூட்டுத்தா பனத்தின் நிதி சிக்கல்களுக்கு முகங் கொடுத்துள்ளதாகவும் சுயமாக இழப்பீட்டு அடிப்படையில் ஓய்வுபெறுதல் முறைமையின் கீழ் ரூபா 115 மில்லியன் செலவிடப்பட்டு ஓய்வூபெறுவதை எதிர்பார்த்த கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 பிரிவின் பிரகாரம் பதில் கடமை வழங்குதல் தற்காலிகமாகவே வழங்க முடியுமான போதும் 15 பதவிகளுக்காக 1 ஆண்டு முதல் 20 ஆண்டுகள் வரையான காலப்பகுதி வரை பதில் கடமை வழங்கல் இடம் பெற்றிருந்தது. | முகாமைத்துவம் கருத்து தெரிவித்திருக்க வில்லை. | தாபன விதிக்கோவையினதும் சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரமும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென. |